பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 09 2025 SUNDAY 6.30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தென்தமிழகத்தின் வளர்ச்சிக்கு தூத்துக்குடியில் அமையவுள்ள இரண்டு கப்பல் கட்டும் தளங்கள் அடித்தளமாக இருக்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

3. மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டு மக்களிடையே இன்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நாளை முதல் செயல்பாட்டிற்கு வரும் இந்த சீர்திருத்தங்கள், சரக்கு மற்றும் சேவை வரி சேமிப்பு திருவிழாவாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சீர்திருத்தங்கள் மூலம், வரி குறைக்கப்படுவதன் காரணமாக மக்களின் சேமிப்பு அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறுவார்கள் என்றும் பிரதமர் கூறினார்.

(சவுண்ட் பைட் – மோடி (தமிழ்) 54 செகண்ட்ஸ்)

மக்களுக்கு சேவையாற்றுவதை தாரக மந்திரமாக கொண்டு செயல்படும் மத்திய அரசின் செயல்பாடுகளுக்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாக இந்த சீர்திருத்தங்கள் திகழும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நான்கு அடுக்குகளாக இருந்த இந்த வரிவிதிப்பு முறை, தற்போது ஐந்து மற்றும் 18 சதவீதம் என்ற இரண்டு அடுக்காக மாற்றப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்குவது நாட்டின் வளத்திற்கு மேலும் வலு சேர்க்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதனை கருத்தில் கொண்டு நாட்டு மக்கள் அனைவரும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையே வாங்க வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கிடையே, சரக்கு மற்றும் சேவை சீர்திருத்தங்கள் மூலம், பிஸ்கட், நெய், ஐஸ்கிரீம், பனீர், ஷாம்பு, சோப், பவுடர், எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலை வெகுவாக குறையும்.

குளிர்சாதன பெட்டிகள், சலவை எந்திரம், தொலைக்காட்சி பெட்டி போன்றவற்றின் விலையும் குறைகின்றன.

36 உயிர் காக்கும் மருந்துகளுக்கு முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சிமெண்ட்-க்கான வரி 28 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக மாற்றியமைக்கப்படுவதால், அதன் விலையும் குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்களின் விலையும், 70 ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வரை குறையும் என்று கார் உற்பத்தி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இதற்கிடையே, மோட்டார் உதிரி பாகங்களுக்கான வரி, 28-லிருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது நுகர்வோருக்கு பெரிய அளவில் பயனளிக்கும் என்று தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் கடை உரிமையாளர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – உரிமையாளர் 34 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சேமிப்பு திருவிழா தொடங்கியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே ஆற்றிய உரையையும் பகிர்ந்துள்ளார்.

சுயசார்பு இந்தியாவிற்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில், பிரதமரின் உரை அமைந்ததாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையே மக்கள் வாங்க வேண்டும் என்று பிரதமர் மீண்டும் வேண்டுகோள் விடுத்திருப்பதையும் திருமதி. நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>>

தென்தமிழகத்தின் வளர்ச்சிக்கு தூத்துக்குடியில் அமையவுள்ள இரண்டு கப்பல் கட்டும் தளங்கள் அடித்தளமாக இருக்கும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் இந்த கப்பல் கட்டும் தளங்கள் அமையவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சேலத்தில், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியை சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மக்கள் நலனை முன்நிறுத்தி அஇஅதிமுக – பிஜேபி கூட்டணி சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தங்கள் கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அதிகரித்து வருவதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் 45 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>>

மாவட்டச் செய்திகள்

கன்னியாகுமரி மாவட்டம், அரசு தாலுகா தலைமை மருத்துவமனையில் மூன்றரை கோடி ரூபாய் மதிப்பில் அறுவை சிகிச்சை பிரிவு கட்டுவதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் இன்று தொடங்கி வைத்தார்.

<<<<<<>>>>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள நான்கு ஏரிகளின் மீன்பிடி உரிமைக்கு மின்னணு வாயிலாக நாளை முதல் அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் அறிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

கன்னியாகுமரி மாவட்டம், திக்கனங்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>>

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் பெய்துவரும் கனமழை காரணமாக, பீமன் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியில் போதைப்பொருள் கடத்திய இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பிரிஸ்பனில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 225 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Tom Hogan 41 ரன் எடுத்தார்.

Henil Patel அபாரமாக பந்துவீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

226 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்த இந்தியா 30 புள்ளி மூன்று ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 227 ரன் எடுத்து, வெற்றிபெற்றது.

Abhigyan Kundu அபாரமாக ஆடி 74 பந்துகளில் 87 ரன் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் வரும் புதன்கிழமை நடைபெறுகிறது.

<<<<<<>>>>>>>

சீனா பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 3 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் பிரமோத்தும், மகளிர் ஒற்றையர் பிரிவில் நித்யஸ்ரீ-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ஜெகதீஷ் - நவீன் இணையும், Ruthick Ragupathi – மலேசியாவின் Cheah Liek Hou இணையும் தங்கப்பதக்கம் வென்றன.

ஆடவர் இரட்டையர் பிரிவில் பிரமோத் – சுகந்த் இணையும், ஒற்றையர் பிரிவில் கிருஷ்ணா மற்றும் சுகந்த்தும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Prem – Abu இணையும், உமேஷ் – சூர்யா இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் கிருஷ்ணாநாகர் – நித்யஸ்ரீ இணையும், ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் நவீன் மற்றும் உமேஷ்-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

<<<<<<>>>>>>>

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் இரவு 8 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

<<<<<<>>>>>>>

ஆசிய Soft Tennis சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

<<<<<<>>>>>>>